செ.வெ.எண்: 248 நாள்: 20.3.10.

# பத்திரிக்கை செய்தி

## உலக வன நாள் 2010

நாள் : 22.3.2010

இடம் : அண்ணா பல்கலை கழகம், சென்னை

நமது முன்னோர்கள் இயற்கையை நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என பிரித்து வைத்துள்ளார்கள். அத்தோடு மட்டுமின்றி அவற்றை மிக கவனமாக காப்பாற்றி வந்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது. ஏனெனில் இயற்கை வாழும் வரைதான் உயிரினங்கள் வாழ முடியும் என்பதை நமது முன்னோர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

1971 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற ''ஐரோப்பிய விவசாய மாநாட்டில்'' உலக வன நாளுக்காக வித்திடப்பட்டு அதே ஆண்டு ''உணவு மற்றும் விவசாய கூட்டமைப்பு'' (FAO ) மார்ச் 21ம் தேதியை ''உலக வன நாளாக'' கொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதம் 21ம் தேதி உலக வன நாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் வனங்களின் அவசியம் பற்றியும், அவைகள் எவ்வாறு உயிரினங்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கி நம்மை, வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் அதன் மூலமாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி மரம் வளர்ப்பதில் மக்களை இணைத்துக் கொண்டு நாம் வாழ்கின்ற இப்பூமியை பசுமை பூமியாக மாற்றிட வேண்டும் என்பதே இந்நாளின் நோக்கமாகும்.

அவ்வாறே இந்த வருடமும் 21.3.2010ம் தேதி அன்று நடைபெறவேண்டிய உலக வன நாள் விழா 22.3.2010 அன்று வரும் உலக நீர் நாள் உடன் இணைத்து வனமும், நீரும் இணைப் பிரியாதவை என உணர்த்தும் வகையில் அண்ணா பல்கலைகழகத்தில் விழா நடைபெற உள்ளது. இத்துடன் விழா அழைப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*தலைமைச் செயலகம், சென்னை-9*